உ. கடன் நிவாரண (திருத்த சட்டம் முன்வடிவு

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு "1981ஆம் ஆண்டுக் கடன் நிவாரண (திருத்தச்) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஊ. கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981ஆம் ஆண்டுக்கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் சார்பாக என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன். புத்தாண்டு விவசாய அறுவடை நாளில், தமிழர் திருநாளில், இன்றைக்கு குண்டு மழை பெய்யப்பட்டு. 10 விவசாயிகள் கண்டு முதல் கண்ட நிலையை விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த அரசு கடைபிடிக்கிறது. இந்த முறை நிச்சயமாக ஒரு நல்ல சூழ்நிலையை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தவில்லை. ஆளுநர் உரை ஒரு பொய்மாள் தோற்றமாகக் காட்சி அளிக்கிறது.